ஓலை 36 | ஓசை 136 | ஏப்ரல் 2023

அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்**
**தானறி குற்றப் படின்.**

தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்.

**Translation:**

What gain, though virtue's semblance high
as heaven his fame exalt,
If heart dies down through
sense of self-detected fault.

**Explanation:**

What avails an appearance (of sanctity) high as heaven, if his mind suffers (the indulgence) of conscious sin.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

அகர முதல இலக்கிய பேரவை

அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்


அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001


அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# நறுந்தொகை

பொருண்மை: கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை

துணைப் பொருண்மைக்கான பொருளுரை: ஏழ்மையில் உழல்வோர்க்கு நட்புமில்லை; உறவுமில்லை.

பா வகை: பதின் சீர் மண்டிலம்

(ஓரடியின் பத்துச் சீரும் ஈரசையான இயற்சீர்களில் வரும். அரையடியில் ஆறு மாச் சீரும், அடுத்த அரையடியில் நான்கு மாச் சீருமாக *மா+மா+ மா+மா+மா+மா+மா+ மா+ மா+மா* என்று அடி தோறும் அமைந்து வரும்.)

நல்லாய் வாழ்ந்து கெட்டவர்க் கில்லை நயமாய் சுற்றம்
நாலு உறவும் நன்மை பொழிய
இல்லல் கண்டே இவரின் வாழ்வும் எதற்கும் துணியும்
ஏற்றம் காண எழிலாய் தேடி
பொல்லா சுற்றம் பொசுக்கும் நெருப்பாய் புவியில் மதிப்பை
புண்ணாய் மாற்றும் பூக்கும் ஏழ்மை
எல்லை இன்றி எங்கும் ஒதுக்க ஏழ்மை சிறையும்
எட்டுப் போடும் எட்டிப் பார்த்தே



ஏழ்மை குறையா? ஏழ்மை சிறையா ? ஏழ்மை கேடா?
ஏன்தான் கண்கள் எரிக்கும் தீயாய்?
வாழ்வில் வறுமை வந்தால் என்ன? வளமும் நலமும்
வழிகள் மூட வலிகள் ஓங்க
தாழ்வு நிலையும் தாக்கிப் போக தாங்கா நெஞ்சம்
தடுக்கி வீழ்ந்து தடைகள் போட
ஆழ்ந்த அறிவும் அங்கே திணற அன்பும் ஏனோ
அகத்தில் ஒட்டா அலுப்பை சுமக்க

மாற்றம் வருமோ மனத்தில் நன்றாய் மாந்தர் நிலையோ
மாறி னாலும் மதிப்பை வழங்க
ஊற்றாய் அன்பை உறவும் சுரக்க உளமும் விரும்பி
ஊட்டி விடுமோ உயர்ந்த பண்பை
ஏற்றத் தாழ்வு இல்லா உலகே எங்கும் என்றும்
இன்பம் காணும் என்றே உணர்வோம்
போற்றி வளர்ப்போம் புதிதாய் எண்ணம் புவியில் அன்பே
பொய்க்கா செல்வம் பொழிக நாளும்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# தன்முனைக்கவிதை

தமிழ்நூல்கள் மொழிபெயர்க்கும்
வயதான அயல்நாட்டு கவிஞர்
தமிழ்நூல்களோடு அடக்கமிட்டு
கடைசிஆசை நிறைவேற்றம்

காதல்திருமணத் தம்பதியின்
விவாகரத்து மனுவின் விசாரணை
ஆலோசனைக் கூட்டத்தில்
இருவாய்ச்சியின் காதல்வாழ்க்கை

இரவுவரை சிறுவனிடம்
வேலை வாங்கும் முதலாளி
வீடு திரும்புகையில்
கூலியாக செட்பரோட்டா



கையில் பிரம்புடன்
வயதான கண்டிப்பு ஆசிரியர்
செல்லமாய் அடிவாங்க
அரசுஅதிகாரிகளுக்கு ஆசை!

அரசுத் தேர்வு
எழுதச் செல்லும் பேரன்
விபூதி பூசிவிடும்
சுருக்குப்பை பாட்டி

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# ஹைக்கூ

1
நிலா வெளிச்சம்
யாருக்கும் தெரியவில்லை
துன்பத்தில் ஆட்காட்டிப் பறவை.



2
தூரத்து நிழலில்
குடத்தில் தண்ணீர்
மரத்தை வெட்டியவனுக்கு.

3
கோடை வெயிலை பொறுத்துக்கொண்டப் பிறகு
மிக அழகாக தெரிகிறது
அந்தியில் சிவந்த சூரியன்.

4
என்னைத் தேடித்தேடி வருகின்றார்கள்
சாதிமத வேறுபாடுகளின்றி
மரங்களின் நிழல்.

5
சென்று திரும்புகையில்
மனம் கேட்கவில்லை
நிரம்பி வழியும் குடம்.

கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# சமத்துவப் பேரொளி

அண்ணலே முன்னரே முனைவரே
நீங்கள் எழுதிய சட்டங்கள்
எழுச்சி பெற்றன
அடங்கிய மக்கள் வெகுண்டெழுந்தன
கல்லாமையில் இருந்த மானுடம்
கல்வி பெற்றது
அதிகாரமற்றவர்கள் அதிகாரம்
எனும் வரம்பை அடைந்தனர்
இல்லாமையும் அகண்டது
ஆளுமையும் கொண்டனர்
ஆட்சியும் செய்தனர்
யாவும் உன்னாலே
உங்கள் அறிவாலே
உங்கள் எழுதுகோல்
முனை பந்தாலே
அண்ணலே அன்றும்
இன்றும் என்றும்
புரட்சி செய்கிறாய் நீயே
எங்கள் பீமாராவ் ராம்ஜியே



கவிஞர் பேரா.முனைவர்.அக.வீரவன்சாரா,சிதம்பரம்

# ஆசைகள்

இவ்வாழ்வில்
பிடிக்கும் என்பதில் தொடங்கி
வேண்டும் என்பதில் பயணித்து
மனநிறைவான மகிழ்ச்சியை தந்து
எதனையும் ஏற்றுக் கொள்ளும்
தன்னம்பிக்கையை கொடுத்து
கவலைகள் ஆயிரம் இருந்தாலும்
உதடுகளுக்கு புன்னகையை கொடுத்து
உள்ளத்தை தெளிவுப்படுத்துகிறது
ஆசைகள்.




கவிஞர் மு.கணேஷ்,சேலம்

# பூவென இருப்போம்

முட்கள் சூழ்
மண்ணுக்குள்
மலர்ச் செடிகளை
நடவுகிறேன்.
வேரின் வீரியத்தில்
வேகமாக வளர்த்து நிற்கும்
பூவின் இதழுக்குள்
நிறைகின்றன முட்கள்
சார்ந்தவை எதுவாயினும்
கிழிப்பதே வேலை என்றானபின்
வேறென்ன செய்யும்
கீறலின் வலியோடு
மணத்தை ஊட்டி
முட்களையும் வாசமென
மலர்த்துகின்றது பூ.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# சொல் பருக்கைகள்

பசியோடிருக்கும்
எனக்கு
சோற்றுக்கு பதில்
சொல்பருக்கைகளை
வைத்திருக்கிறாய்.

என் வயிற்றுப் பசிக்கு
அது போதுமானது
இல்லையென
என்னைப்போல்
நீ அறிந்திருந்த போதிலும்
மாறுபட்டிருக்கிறது
உன் விருந்து.

வயிற்றுப் பசியை விட
கவிதைப் பசிக்கு
நல்லுணவுதான்.
இப்போது
சொல் பருக்கைகளை
ரசித்தும் ருசித்தும்
உண்ணத்தொடங்கி விட்டேன்.



விருந்தைத் தின்று களித்து
தாம்பூலம் தரித்து
ஏப்பம் விட்டு
செரித்தும் விட்டது.
சொல் பருக்கைகளை
என்னுடன் சேர்ந்து
இக்கவிதையும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# தாய்மை எனும் பூங்காற்று

பத்து மாதம் சுமந்து பெற்றவள்
பூங்காற்றாய் தென்றலாய் வலம் வருபவள்
சோகத்திலும் ஆறுதலாய் நமக்கு கை கொடுப்பவள்
எதையும் விலக்கி வாங்கலாம்
தாய் பாசத்தை வாங்க முடியாதே
பாலூட்டி சீராட்டி வளர்த்தவள்
தான் கஷ்ட பட்டாலும்
பிள்ளை கஷ்டத்தை அனுபவிக்க கூடாது என நினைப்பவள்
சுகமான ராகங்களோடு நெஞ்சில் சுமந்தவள்
எதற்கும் ஆசை படாதவள்
குடும்பத்திற்காக ஓயாமல் உழைத்தவள்
காற்று இல்லையெனில் மனிதனால் உயிர் வாழ முடியாதே
தாய் இல்லையெனினும் உயிர் வாழ முடியாது
பெற்றவள் இருந்தால் மட்டுமே  குழந்தையை ஆதரிப்பாள்
இல்லை யெனில் குழந்தை நிலை என்னவாகும்
செல்வம் இருந்தாலும் தாய்க்கு ஒன்றும் ஈடாகதே
வாழும் நாளில் தாயை கண் கலங்காமல் பார்ப்போம்
முதியோர் இல்லத்தில் விட வேண்டாமே
நம்மை வளர்த்து ஆளாக்கி விட்ட பிறகு
மீண்டும் குழந்தையாகிறாள்
அவர்களை பாசத்தோடும் அரவணைப்போடும்
கண் கலங்காமல் பார்க்க வேண்டுமே
நம்மை பெற்ற தாய் நமக்கு தெய்வமே
தெய்வத்தை தேடி கோவிலுக்கு செல்லாதே
வீட்டிலே இருக்கிறார்கள்
ஒவ்வொரு முறையும் அவர்களிடம் ஆசி பெற்று செல்வோமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# பேரன்பே

அன்பு சகலத்தையும்
தாங்குகிறது
சகிக்கிறது
நம்புகிறது
அதே அன்பு தீங்கு நினையாது
துரோகம் செய்யாது
இறுமாப்பு அடையாது
ஏமாற்றாது.

அன்பின் மொழி
பேச்சுக்களை விட
உணர்வுகளால்
புரிந்து மவுன மொழியில்
ஆழ்நிலையில் சாந்தமடைகிறது.

சிலர் அன்பை வார்த்தையால்
உணர்த்தலாம்
சிலர் அன்பை உணர்வுகளால்
உணர்த்தலாம்.

ஆனால்!
சிலர் அன்பு புரியாது
அதை காலம் உணர்த்தும் போது
கண்கள் கலங்கும்
அப்படித்தான் என் உயிரையும்
மீட்டிய உயிர் நட்புக்கள்.
அவர்களின் அன்பிலும் பாசத்திலும்
சிக்குண்ட நான்
காலமெல்லாம் கிடைத்த
அதே அன்பை
என் உயிர் உள்ளவரை
நானும் அளித்திடுவேனே.



வாழ்க்கையில்
தடுமாறும் போதும்
தடம் மாறும் போதும்
நினைவில் கொள்ள வேண்டிய வரிகள்.

"எல்லாம் சில காலம்தான்.
எதுவும் நிலை இல்லை.
இதுவும் கடந்து போகும்"
என தேற்றி
என்னை உன் அன்பில்
நனைத்திட்ட
உன்னத உறவிற்கு
எல்லை என்பதே இல்லை
இதுவே நிதர்சனம்!

கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# உளியென மாறும் வலி

கனவுகளில் புதையுண்டு போகாது
போதைதனில் சிக்குண்டு கிடக்காது

அன்பெனும் ஆயுதத்தை எடுத்து
அகிலத்தை ஆளப் பழகிடு

என்னால் முடியாது என்பதனை விடுத்து
பயிற்சி முயற்சி கொண்டு முன்னேறிடு

கல்வியென்னும் செல்வமதை கைவிடாது
புத்துணர்வுடன் புத்தகங்களை கற்றிடு

என்னை மிஞ்சியவர் எவருமிலர் என்பதை விடுத்து
தாய் தந்தையரின் சொல் கேட்டு நடந்திடு

தோல்விதனை கண்டு துவளாது
வெற்றிக்கனி சுவைத்திட ஆயத்தமாகிடு



வலி பொறுப்பதால் தானே
கல்லும் இங்கே சிற்பமாகுது

தன்னம்பிக்கை கொண்டு முன்னேறு
உன் வலியும் இங்கே உளியாகும்

உண்மை நேர்மை நியாயத்துடனே
உண்மையுடன் நீ உழைத்திட
வாழ்வில் என்றும் வெற்றியே

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# சுடாமல் விடாது

உண்மை உண்மையில்
புதைந்து கிடக்கலாம்
உண்மை மண்ணடியில்
உறங்கிக் கிடக்கலாம்
ஆனாலும் அது
ஒளிந்த நிஜத்தின் நிழல்
விழித்துக் கனலும் தழல்
அதன் வெப்பம் கனிந்து
வெளிப்பட்டே தீரும்
சாம்பலடியில் அது
சாபமாய்க் காத்திருக்கும்
மாயத்துணியால் மூடப்பட்டிருந்தாலும்
சுடராய்த் துளைத்து மேலெழும்
பொய்களைச் சுட்டெரித்துப் பொங்கும்
உண்மை பேசாது
மௌனிக்கும் ஊமையல்ல
பிறழ்ச்சி அடைந்த பிழையுமல்ல
சாட்சிகள் இல்லையென்று
போலி நாடகங்கள்
போதனை செய்யலாம்
மனசாட்சியும்
இறைசாட்சியும்
உள்ளவரை ஊழலுக்குச் சாவுமணிதான்
சமாதி ஊர்வலம்தான்
உண்மை
காலம் கடந்தாலும்
காலம் முடிந்தாலும்
வெளிப்பட்டே தீரும்



காரணகாரியங்கள் உடைத்து
கரிய இருள் துடைத்துக்
கதிரொளியாய் ஒருநாள்
காசினியில் புலரும்
உண்மை நெடுநாள் உறங்காது
உண்மை சுடாமல் அணையாது

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# தோழமை

கவிதையில் அடக்கமுடியா
கவிதை நீ
நிறங்களில் நிறையா
நிறம்! நீ
குணங்களில் நீ
மட்டும் வேறுபட்டவள்
சிறுகுறை கூட சொல்ல
தெரியாத சிறுமி! நீ
வயதானாலும் நட்பில் நாம்
பால்யத்திலே வாழ்கிறோம்
காமமில்லா நட்புக்கு
நாம் இலக்கணமானோம்
இலக்கணபிழை நமக்கில்லையடி
சிறு சண்டையோ பெரும் போரோ
நம் நட்புக்கு
நாமே வெள்ளைக்கொடியேந்துவோம்
காலத்தால் அழியா
நட்பை விதைப்போம்
வரலாற்றில்.



கவிஞர் தமிழ்

# வெளிக்காட்டாத உணர்வுகள்

கற்பனைகளில் கள்ளதனமான புன்னகை
உன் முகம் கண்டு
கடந்து செல்லும் களிப்பான பயணம்
நினைவுகளாக
சின்னஞ்சிறு சண்டைகளும்
நீண்டநெடு உரையாடல்களும்
மனதுக்குள் எண்ணங்களாக
துயரத் தருணங்களில் அழுகையில்
தோள் சாய்ந்தத்தோரணையும் கற்பனைதான்
இன்னும் சில நினைவுகள்
கற்பனைகளாக உன் உருவம் கொண்டு
இதுவும் ஒரு மகிழ்ச்சிதான்
இருப்பினும்
கனவுகள் நனவாகும் போது தோன்றும் மகிழ்வோ
மீண்டும் பிறந்து வந்தது போல் இருக்குமாம்



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு மாவட்டம்

# இடைவெளி

பலருக்கு பின்னால் மறைந்துள்ள
முகங்கள் கண்டிப்பாக
அவரின் முதுகைத்துளைத்து
வெளியேறும்
ஒரு கண்ணும் செவியும்
உரையாடியப் பிறகு
எதிர்வரும் உண்மைகள்
பத்திகளாக புணரப்படுகின்றன

எப்பொழுதும் காணாத
உண்மைகளுக்குப் பின்னால்
சொல்லி வென்றிட்ட பொய்களும்
சொல்லாது இழந்த உண்மைகளும்
மறைந்துள்ளன



குழந்தையாக பிறந்தேன்
குமரியாக வளர்ந்நேன்
நிழலையும் தின்று தீர்த்தன
நகம் வளர்ந்த நாவினர்

குழந்தை ரூபம்
தாய்மையின்றி தத்தளிக்கிறது
மூவாறு வயது.

இவற்றுள் பொய்யிற்கும்
உண்மைக்கும் இடைகொண்ட வெளி
சற்று நீள்மை பெறுகிறது
இடைவெளி நீட்சிப் பெறுகிறது.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# வெறுப்புகளின் சம்பாத்தியமாம்

இவளின் ஊமை மொழியும்
கணத்து போனதடா.
லேசான சுவாசமும்
தீப்பிழம்பாய் மாறுதடா.

அங்கம் சிவக்க
விழி நீர் வடித்தும்
அகம் பட்ட காயத்தில்
ஆழமானதே தவிர குணமாகா.

இவளூடே வலி மறைத்தும்
விழி காட்டுதே
நிதர்சனத்தை யாதென



அவரவர் வலியை அவரவரே
உணர்ந்திட கூடுமாம்.
நம்பிடும் உறவின் பின்தோற்றம் ?

வதைக்கும் வடுச்சொல்லோ
உறவுகளால் அதரம் சிந்த.

தடுக்கிடும் அகம் மறத்து போனதென்ன!
கனலியாய் எறியும் நெஞ்சகம்
திவலையிலும் அடங்கிடா
பெருவெள்ளத்திலும் அடங்கிடா
தலைக்கேறும் பாரத்தில்
பஞ்சமாய் அக்கறையே.

அச்சுறுத்தும் நாட்களை
கடந்திட அடி வயிற்றில்
கலங்கலான எண்ணங்கள்.
பொய்யாய் சிரிக்கவும் முடியவில்லை.
உண்மையாய் அழுதிடவும் வாய்ப்பில்லை.
நிசப்தத்திலும் கடக்கப்போகும்
கணங்களில் அனல் பறக்க
வதனமும் வாடியே வருந்தியே
தோற்றம் பெற
வெறுப்புக்களின் சம்பாத்தியத்தில்
மட்டும் பஞ்சமே இல்லையாம் இவளுக்கு.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# மாயக்குதிரை

மாயக்குதிரை வேண்டும்,
கடந்து சென்ற
காலத்தினைப்
புரட்டி எடுத்து
அலசி ஆராய்ந்து,
அறியாமல் செய்த
பிழை திருத்திடவும்,
புரியாதிருந்த
விடுகதைகளின்
விடை அறிந்திடவும்,
முற்பிறவியில் செய்த
பாவமே இப்பிறவியில்
உன்னைத் தண்டிக்கிறது
என்று அனுதினமும்
சபித்திடும் மாந்தருக்குப்
பதில் கொடுத்திட
முற்பிறவிக்குள்ளும்
சென்று என்னை
நானே உற்று நோக்கிட
வா எனது
மாயக்குதிரையே !



உன் மீது என்னைச்
சுமந்து செல் ,
அடுத்து வரும்
நிகழ்வுகளும்
என்னைப்
பகடையாக்கிப்
பரிகாசம் செய்திடாமல்,
சுகமான வாழ்வை
எனக்குப் பரிசாகத்
தந்திடும் மாயங்களுக்குள்
என்னை அழைத்துச்
சென்று விடு,
எனது மாயக்குதிரையே!

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# என் வீட்டு தேவதை



வாழ்க்கைத் துணை
என்னவள் ஈன்றிட

பொக்கிசமாய் தவமின்றி
கிடைத்த வரமே

உன்முகம் கண்டிட
துயரெல்லாம் தொலைந்திடுமே

இனித்திடும் சொல்லால்
வசந்தமும் வசப்பட

பாறை நெஞ்சில்
மலரென மலர்ந்தவளே

வாழ்வின் அர்த்தத்தை
உணர்த்திய என்னுயிரே

மெல்லச் சிணுங்கிடும்
வெள்ளிக் கொலுசொலியால்

பனித் துளியிடம்
சிறைபடும் மலரென

சிறுமலர் உன்னன்பில்
ஆயுள் கைதியானேன்

பார்போற்றும் தேவதையாய்
நீயும் உயர்ந்திட

விரல்கள்பற்றி பள்ளிவந்து
உன்னிடமிருந்து விலகிட

மழலையென நானும்
அழுதேன் மாலைவரை



**கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு**

# வறுமையை விட அறியாமை கொடிது

வறுமை இன்று இல்லை நாளைதீரும்
அறியாமை பணம் இருந்தாலும் வீணாகும்
வறுமை விட அறியாமை கொடியது
வறுமை மாறும் அறியாமை மாறாது
அறியாமை மனித வாழ்வை வீணாக்கும்
அறியாமை உள்ள மனிதன் முன்னேறுவதில்லை
அறியாமை மனிதனைதிறன் இழக்கசெய்யும்
புத்தி இல்லாத மனிதன் பித்து
அறியாமை கொண்டவன் பணம் கொண்டாலும்வீண்
வறுமை மனிதனுக்கு ஒருநாள் நீங்கும்
அறியாமை நீங்க விட்டால் அழித்துவிடும்
அறியாமை கொண்டவன் வாழ்வதே கடினம்
அறியாமை உள்ளவன் மறந்து துன்புறுவான்
வருமையை கூட ஒருநாள் வெல்லலாம்
அறியாமை உன்னை அறிவை மங்கச்செய்யும்
உன்னை பிறருக்கு தவறாய் காட்டும்
அறியாமை உன்னை வாழ்வில் புறத்தள்ளும்
அறியாமை மனத்தை தெளிவாக இருக்கசெய்யாது
அறியா வண்ணம் மனத்தை குழப்பும்
அறியாமை உன்னை துரத்தும் ஆயுதம்
அறியாமை வாழ்வை வீணாடிக்க செய்யும்
வறுமை கூட சிறிது நாட்கள்
அறியாமை வாழ்நாள் பயணிக்கும் ஒன்று
வறுமை கொடிது அறியாமை மிகக்கொடியது.



கவிஞர் சி.சிவப்பிரியா,பொன்செய்

# யாரி யாரி?

ஐம்புலன்களும் புலம்புதே பூமியில் மனித மடந்தையில்
இருவரால் உடல் ஆனதே காலத்தால் புதுமையில்
சொற்ப அறிவும் சொந்தம் கொள்ளுதே
ஆறாம் அறிவும் அழித்துப் போகுதே
அறிந்த பின்பும் அறியாமை வந்தது யாரால் ?
அலை மோதுதே ஆயுளும் அங்கும் எங்கும்
நம்பினோர் நயம் நாடகம்நாட்டில்

வருவதும் போவதும் யாரோ ஒருவரால்
தீண்டுதே தீமையில் தீக்கதிரும் தீக்குளித்து
மாறாத மருந்தும் திகட்டாத விருந்தும்
வலியே வாழ்க்கையானதே வருங்காலம் எங்கே?
உன்னிடம் என்னிடம் இருப்பது என்ன நாளை நிலைப்பதென்ன
நீ மட்டும் நிம்மதியில் உன் நிலையும் நீதியும் பின் மதியில்
புகட்டுதே உன் புகழாரம் பூமியில் புண்பட்டதே பாதியில்

பலரை பகடை போல் பாவித்து பழிவாங்கி
யார் யார் யாராலோ ஒருவருக்கு பேரோடு
பலர் நீராட வழியில்லை நீ மட்டும் நிதிநிலை
ஒவ்வொருவரால் ஏடு கொண்டதே நாட்டில் பலர் வடு
அறியன ஆதங்கம் ஆராய்ந்தபின் அமர்க்களம்
குருதியின் சாயம் பட்டதே கொடியின் வேடிக்கை
கொல்லையில் பாதி வெள்ளையில் பாதி பிள்ளையில் மீதி

பாய்ந்து ஓடுதே மின்சாரம் பரம்பரை வரை
பாமரரை எரித்து விளையாடி
உன் விதிக்கு ஊர் சொந்தமா? உலகம் சொந்தமா?
ஆறடி மண்ணிலும் அரையாண்டில் தின்றாயோ
எல்லோருக்கும் உனக்கும்
பாவித்து பாவங்களை பக்கம் அழைக்காதே
பாமரரை தின்று பதக்கம் வெல்லாதே
காலம் மட்டும் கண்ணுக்குத் தெரிகிறதே
கயவர்கள் யார்? யார்?



தெரிந்தும் தெரியாதது போல்
நாம் யார்? யார்?
இந்தக் கேள்விக்கு ஓர் வீரம் இருந்தால்
விடை தருவது யார்? யார்?
இதற்கு காத்திருப்பது யார்? யார்?
காலமே...!?

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# கொடுங்கோல் சுவடிகள்

அற்றம் தந்திடு !
ஆக்கம் சிதைத்திடு!
இடுக்கண் விதைத்திடு !
ஈகை கைவிடு!
உன்னம் முறித்திடு!
ஊழல் பெருக்கிடு!
எயில் இடித்திடு!
ஏதம் வளர்த்திடு!
ஐயவி அழித்திடு!
ஒப்புரவு நீக்கீடு !
ஓம்புதல் ஒழித்திடு!
ஔவை மொழி மறந்திடு!
அஃகம் அகற்றிடு!



அற்றம்-அழிவு,துன்பம்
உன்னம்-படகு
எயில்-மதில்
ஏதம்-பகை
ஐயவி-வெண்கடுகு
ஓம்புதல்-பாதுகாத்தல்,
ஔவை-தாய்
அஃகம் -கூலம்

கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# அறன் வலியுறுத்தல்

அதிகாரம் 4

உள்ளமதில் நேர்மை அறம்

அறத்தின் வழி நடப்போருக்கு
செல்வமும் சிறப்பும் கை கூடுமே.

அறமின்றி வாழ்வோர் வாழ்வில்
என்றென்றும் மகிழ்ச்சி உயர்வு சேரா
வீழ்ச்சி மட்டுமே நிலைத்திருக்கும்

அகத்தில் தூய்மை வேண்டும்

புறத்தில் செய்யும் நற்செயல்கள்
வெறும் பகட்டுக்காக செய்யும் சடங்குகளே

அடுத்தவரை அழிக்க நினைப்பது
பேராசை, கடும் சினம் வன்சொற்கள் இவை
நான்கும் இல்லாமல் வாழ்வதே அறமும்

மனதால் மனம் நிறைந்து செய்வது அறம்
மதிப்புக்காக செய்யும் அறம் அறமன்று




மகிழ்ச்சியை தருவது அறம்
நிம்மதியை தருவது அறம்.

அறம் இல்லையேல் அகிலம் இல்லையே
அதிலும் நமது பாரதம் இல்லையே

அறத்தால் ஒழுக்கத்தால் உயர்ந்து நிற்பது
நமது இந்திய தேசம்.

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# என் வாழ்க்கை

உனது கரங்களில்
தவழ்கிறது எனது
வாழ்க்கை.

அழுத்தம் கொடுக்காதே!
அன்பை மட்டுமே காட்டாதே!

இறுக்கி பிடிக்காதே!
இலகுவாய் விடாதே!

உரக்க கத்தாதே!
உறுதுணையாய் இருக்க மறவாதே!



கண்டிப்பை கொட்டாதே!
கண்டுக்கொள்ளாமல் இருக்காதே!

சண்டையிட்டு கொள்ளலாம்
சமாதானம் ஆகிவிடலாம்!
பேசாது போல நடிக்கலாம்
பேசியே உனை கொள்ளலாம்!

உனது கோபம் எல்லாம் பொய்யே!
நான் வீம்பு பிடிப்பேன் அதிகமே!
வாடிபோனால் போதுமே
வாஞ்சையாய் வருட உன் கரம் நீளுமே!

என்னை நெறிப்படுத்த
எனை சுமந்த நீ வேண்டும்.
உன்னை பெருமைப்படுத்த
உன்னில் உதித்த நான் வேண்டும்.

கவிஞர் வாணிசுந்தரம்,பெங்களூர்

# வயோதிபம்!

ஹைக்கூ




கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# வறுமையைவிட அறியாமை கொடிது!

பட்டினியில் உணவின்றி வறுமை வாட்டினாலும்
பணத்தை தேடி பசியை அகற்றலாம்
பணத்தை விடவும் பெரிய செல்வமே
படித்து பெற்ற அறிவுச் செல்வமே

வறுமையை அகற்றிட வழிகள் உண்டு
வருத்தும் வறுமையும் கல்வியால் அகன்றிடும்
வறுமைக்கு அப்துல்கலாமும் முன்மாதிரியே
வறுமையிலும் படிப்பால் உயர்ந்து நின்றாரே

கற்றவனுக்கு சென்றிடமெல்லாம் சிறப்பு நிலைக்குமே
கல்லாதவனுக்கு அடிமைத்தனம் குடி கொல்லுமே
கல்வியற்றால் வாழ்வும் இருளாக மாறுமே
கலங்கிட ஏச்சுப் பேச்சும் கிட்டுமே

விளைச்சலற்ற நிலத்திற்கு மரியாதையில்லை போன்றே
விலை உயிர் அறிவை பெறாதவனுமே
விதைக்கத் தெரியாத மடையன் கேடானவனாகிறானே
விடியாத வறுமையிருந்தால் மறைத்து வாழலாம்

கல்வி இல்லையேன் மறைந்தாலும் வாழமுடியாதே
கருத்தில் ஏறி குருத்தில் படவில்லையேன்
கருகிவிடும் வாழ்க்கையின் அஸ்திவாரம் தானே
கண்ணிருந்தும் குருடனாக்கிடும் கல்வி இல்லையேல்



கண்ணாண கல்வி உன்னை உயர்த்துமே
கல்லாகினும் கல்வி சிலை ஆக்குமே
கற்காது நீ இருந்து விடாதே
கற்றால் தீர்ந்திடும் வறுமையும் உனதே

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# எண்ணங்களே உயர்வு

எண்ணங்கள் - கற்பனையின்
எண்ணிலா படிவங்கள்!

நாள் கிழமையின்றி
நான் யாரென்று!

இருக்கும் நிலையிலும்
இழந்த கலவையின்

வாழவா என்றே
வரவேற்கும் வானவில்

சிங்கங்களின் சிலிர்ப்பில்
சிறப்பான சிறகடிப்பில்!

பறக்கும் பறவையாய்
வெற்றிகள் தேடும் !

வருங்காலம் நமதென்றே
வசந்தங்களை வரவேற்போம்

அன்பின் ஆரூடமாய்
ஆளட்டும் மனதே

கசக்கும் அனுபவங்களை!
கசக்கி எறிந்தே

அதிகாலை விடியலை
அற்புதமான வெளிப்பாடுகளில்!



கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# காத்திருக்கிறேன்

தென்பொதிகை சாரலும்தென்காசித் தூறலும்
போட்டியிடும் குற்றாலம்
பராசக்தி கல்லூரிக்குள்
புதுமுகமாக காலடிப் பதித்தேன்
அறிமுகமான நாள்முதலே
நட்பூக்களுடன் ஆட்டம்பாட்டம்
வானரங்கள் வரும் தொல்லையால்
வகுப்பறையே சொர்க்கமானது
மூடியே இருக்கும் வாயிலை
தட்டுவது பலநேரம் பேராசிரியை
சிலநேரம் பெருங்குரங்குகள்
கன்னியர் கல்லூரியாதலால்
காதலிக்க வழியல்லை
காதலிப்போர் பலருண்டு
கண்டிப்பான காலமாதலால்
கட்டிடும் சேலையிலும் நிபுணரானோம்
இலக்கியம் என்பதாலே
இயல்பாய் உறங்கிடும் பாடவேளை
மதிய உணவுக்கு மரத்தடிகள்
மற்றோர் பங்காளியாய் மந்திகள்
எத்தனையோ சிரிப்புகள் பேச்சுக்கள்
அத்தனையும் இனியஅர்த்தமற்றவை
காலச்சக்கரம் மீண்டும் வந்தால்
காத்திருக்கிறேன் கல்லூரியில் கால்பதிக்க.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# புத்தகம்

புத்தகம்
பெய்து கொண்டிருக்கிறது
குடைபிடிக்கா
மனம்
நனைகிறது

பக்கங்களின்
நகர்வில்
அவ்வப்போது
மறுபரிசீலனை



ஓட்டைக் குடை
பிடித்ததால்
நனைதல்
தொடர்கிறது

கடலும்
மலையும்
தாண்டிய
களைப்பு

எனை
கடன் வாங்கிய
புத்தகம்
உறங்க

சாகச உலகின்
கதாபாத்திரங்களோடு
என் பயணம்
தொடர்கிறது

குடைமடக்கி
குடிலுக்குள்
புகுந்து
உறங்குகின்றேன்

கனவில்
நானும்
ஒரு புத்தகமும்.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# சித்திரை மகளே வருக

நித்திரை திருடிய
சித்திரை மகளே வருக வருக
நித்தமொரு வளம் நிறைத்து
நிறைவாய் வருக வருக
மணம் பரப்பி மலர் நிரப்பும்
மகிழினியே வருக வருக
குணம் குன்றா குன்றெனவே
மேதினியில் வருக வருக
வெண்கதிரோன் விரிகதிரில்
வெம்மை தாங்கி வருக வருக
சரக்கொன்றை மலரெனவே
அழகுடனே வருக வருக
இன்பம் நிறை வாழ்வு கொண்டு
இனிமையுடனே வருக வருக
துயர் நீக்கி அள்ளித்தரும்
துணிவெனவே வருக வருக
முக்கனி சுவையுடனே
முதன்மையாய் வருக வருக
அடர் வனமாய் வளம் கொழித்து
இடர் களைய வருக வருக
செடிகொடிகள் செழிப்புடனே
செல்வம் கொண்டு வருக வருக
நாடெங்கும் சிறப்புறவே
நன்மை கொண்டு வருக வருக




கவிஞர் அகிலா ஜெயராமன், செந்துறை

# திறம்பட செய்திடவே!

அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ
ஆசை குழந்தைகளின் இறப்பை தவிர்க்க
இல்லாதவர்க்கு இல்லையென்று சொல்லாதிருக்க
ஈகைதன்மையை செல்வந்தரிடம் கற்பிக்க
உண்மையான அன்பை கண்டுபிடிக்க
ஊழல் செய்வோரை செயலற்று போக வைக்க
எளியோரை வறியோரிடமிருந்து காப்பாற்ற
ஏமாற்றுபவரிடமிருந்து தப்பித்து கொள்ள
ஐயமுள்ள கேள்விகளுக்கு விடை தேட
ஒவ்வொரு நாளும் வருமானத்திற்கு வழி தேட
ஓயும் வரை ஓடிக்கொண்டிருக்க உடலில் சக்தி இருக்க
ஔவை சொன்ன வழியில் அவ்வளவையும் கடைபிடிக்க
எஃகாக திறமை பல வேண்டுமே
அஃது திறம்பட செய்திடவே!



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# விரைந்து வா

பொன் அந்தி மாலை.
வான்மகள் வேறு உடை அணிந்த வேளை.
மயக்கம் தரும் மாலை வேளையில்
மயக்கத்துடன்,
புதுப்பெயல் பொழிய
புது அருவி கொட்டும் கானநாடன்,நானென்று
என்னைத் தேடி வந்தாய்.
என்னிடம் மையல் கொண்டாய்.
மயக்கத்தைத் தந்தாய்.
குறும்பொறை நாடனென்று
குறும்பாய் எனைப் பார்த்து நகைத்தாய்.
குதூகலம் தந்தாய்.
நன்செய் நிறை ஊரன் என்றே
நயந்து கூறி நாணும்படி
என்னைச் சீண்டினாய்.
பின்,தண்ணென்ற காற்று வீசும்
கடல் சேர்ப்பனென்றே கூறிக்
கலந்தாய் என்னோடு.
மங்கிய மாலைப் பொழுதும்
உன் நினைவை மனதில் எழுப்பிட,
நீயோ,எனைப் பிரிந்தாய்.
உன் நினைவோ என் நெஞ்சில்
அகலாது வருத்துகிறது.
நீ,என்னைத் தீண்டியது
முப்போதும் மறக்காமல் நினைவில்
நின்றிருக்க
நான் நெய்தல் மலராய்க்
காலையிலேயே
உன் நினைவால் கூம்பி விட்டேன்.



ஏதும் செய்ய முடியாது வாடி
நிற்கின்றேன்.
உன் நினைவால் தகிக்கிறேன்.
என் மயக்கத்தைப் போக்கிடத்
தலைவனே,நீ விரைந்து வாவென்றே
அழைக்கிறாள், தலைவி !.

கவிஞர் செ.கலைவாணி,ஆஸ்திரேலியா

# சொல்

பறந்து வந்தது ஒரு கல்
அன்றைய தினமே புதிதானது
கூரையில் சிதறிய ஓடு



பறந்து வந்தது ஒரு கட்டை
சில நாட்களில் ஆறிவிட்டது
தலையை பதம் பார்த்த காயம்

பறந்து வந்தது ஒரு ஆயுதம்
சில வாரங்களில் விடுபட்டது
தையல்கள் சூழ்ந்த தசைப்பகுதி

பறந்து வந்தது ஒரு சொல்

அறை விட்டு அறை தாவுகிறேன்
அதுவும் தாவி வருகிறது

விழிகளை மூடித் தூங்குகிறேன்
இமைகளுக்குள்ளே
அது விழித்திருக்கிறது

ஊர் விட்டு ஊர் செல்கிறேன்
உற்ற தோழனாய் அதுவே
துணைக்கு வருகிறது

இருட்டறையில் நான்
அங்கும் அதன் ஆளுமைதான்

கோயிலில் விட்டு திரும்புகிறேன்
வீட்டில் அதுவே
விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது

போதையிடம் பதுங்குகிறேன்
உதிரும் சொற்களில்
அதுவே வெளிவருகிறது

சொல்லை சொல்லால்
விலக்க முடியுமா?
விடை தேடி அலைகிறேன்
அதுவும் கூடவே அலைகிறது.

கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# செயற்கை

இன்று எல்லாம் செயற்கையாகி போச்சு
இயற்கைக்கு மாறாகவே எல்லாம் நடக்குது
அகத்தின் அழகு முகத்தில் எங்கே தெரியுது
சிரிப்புங்குற செயற்கை முகமூடி அணியும்போது

பேச்சில் செயற்கை பழகுவதில் செயற்கை
அன்பு செலுத்துவதில் கூட செயற்கை
செயற்கை மழை செயற்கை உணவு
செயற்கை அழுகை செயற்கை உறுப்பு



செயற்கை முறையில் கருதரிப்பு மட்டுமா?
செயற்கையாகவே இப்போ கல்யாணமும் நடக்குது
செயற்கை கோபம் செயற்கை கோலம்
செயற்கை கழனி செயற்கை காய்கறி

உணர்வுகளும் இன்று செயற்கை ஆச்சு
பல உறவுகளும் இங்கு பொய்யா போச்சு
செயற்கை இதயம் கூட பொருத்தலாம்
இரக்கமும், காதலும், கருணையும் செயற்கை யாகுமோ?

செயற்கையை நினைக்கையிலே இயற்கையாகவே கண்கள் கலங்குது
இயற்கையை புறக்கணிக்கும் மானிடமே புரிந்துக்கொள்
இறப்பு என்பது செயற்கையாகாது என்றென்றும்
இயற்கையின் அழைப்பது இறைவனின் கணக்கு என்று

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி


# தமிழ் மாதத் தொடக்கமே வருகவே

தமிழ் மாதத் தொடக்கமே வருகவே
உந்தன் சிறப்பான வெம்மையைத் தருகவே
பனிக்கட்டியும் நீராய் உருகவே
மாந்தருக்கு வியர்வை வெள்ளம் பெருகவே
மலரின் மென்மையும் வெம்மையால் கருகவே செய்திடுவாய்
சோலையிலும் பசுமையைக் குறைத்திடுவாய்
பாலையிலும் கானலை நிறைத்திடுவாய்
தன்நிழல் தன்னடி ஆகுமே
உன் அழலால் பாதமும் வேகுமே
கோயில்களில் எங்கும் தேரோட்டம்
தேரிழுக்க மக்களுக்குப் போராட்டம்
தமிழில்உண்டு நெடுங்கணக்கு
சித்திரகுப்தரனார் எழுதிடுவார் பெருங்கணக்கு
ஆறு குளங்களில் நீர்நிலை வறண்டிடும்
அருவிகளில் நீராடக் கூட்டம் திரண்டிடும்
வன்மையும் மென்மையும் முரண்பட்ட குணங்கள் உனக்கு
பனியை உருக்கி நீராய் ஆக்குவாய்
களிமண்ணை இறுக்கி நீரை நீக்குவாய்
பருத்தி ஆடையை உடலில் அணிந்திடுவோம்
உதகை, கொடைக்கானல் என்றே சுற்றிடுவோம்
கோடையின் கொடை என மகிழ்ச்சியைப் பெற்றிடுவோம்




கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# சுவர் இல்லா சித்திரம்



அன்பில் ஒன்று கலந்து
ஆசையில் கை பிடித்து
இரு மனங்கள் சங்கமித்து
ஈருடல் ஓருயிர் என உணர்ந்து
உண்மை காதல் மாறாது
ஊர் போற்றும் தம்பதியாய்
என்னவனின் இதயத்தில்
ஏகாந்தமாய் திகழ்ந்து
ஐம்பதிலும் பாசத்துடன் பிரியாது
ஒற்றுமையாய் வாழ்ந்த வாழ்க்கை
ஓய்ந்து போனது காலத்தின் கோலத்தால்.
ஆழ்மனதில் பதிந்த
அழகான நினைவுகள்
அணு அணுவாய் ரசித்த மனம்
அமைதியற்று கிடக்கிறது.
காலங்கள் கடந்து சென்றாலும்
கரைபுரண்டு வழிகிறது கண்ணீர் துளிகள்.
விழி நீர் வழியும் முன்
விரல் கொண்டு துடைத்திட
விண்ணுலகம் சென்றவன் இல்லை.
விழித்தெழும் கண்களும்
விரக்தியாகும் விதிதனை நினைத்து
நினைவுகளின் நீட்சி யில் நிலைகுலைந்த மனம்
நிஜங்களை அசைப்போட்டு நிம்மதி காணுமா?
நிமிட நேரத்தில் உடைந்திடும்
நீர் குமிழ் போல் மனது.
காயங்கள் ஆறிடவே மௌனமொழி
ஒன்றே சிறந்த மருந்தென அமைதியை விரும்பும்.
இனிதொரு நாளும் இனித்திடுமா
"நீ"யில்லா இத்திருமணநாளில் இனி, நான்
சுவர் இல்லா சித்திரம் தானே.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# வேண்டாம் சாபங்கள்!

வஞ்சக நஞ்சை நெஞ்சில் சூடி
முகம் மலர சொற்கள் பேசி
எம் அகத்தை குளிர்விப்பதாய் நடித்து
வேதனையை பரிசாய் தருகின்றனர் சிலர்
மட்டம் தட்டி இட்டுக்கட்டி
வாய் கூசாமல் பொய்யும் பேசி
தம்மை மேலாக்கி மகுடம் சூடி
புண்படுத்த நினைக்கின்றனர் இன்னும் சிலர்
பிறர் குறைகளை அம்பலப்படுத்தும் நீங்கள்,
நிறைகள் அற்றவர் என உணர்ந்திடல் வேண்டாமோ?
மற்றவர் பக்கம் நீ சுட்டிக் காட்டையில்.
மற்ற விரல்கள் உன் பக்கமடா!
தலையசைத்து உடல் கரையும் மெழுகுவர்த்தி போலே
உன்னை நீயே மாய்த்துக் கொள்கிறாய்!
வேண்டாம் சாபங்கள்!



கவிஞர் ஹம்னா அக்பர்,இலங்கை

# ஊழ்

**அதிகாரம் : 38**

முற்பிறவியில் செய்பலனை
நன்மையாயோ தீமையாயோ.
இப்பிறவியில் பெறுவதே
ஊழ்வினை என்பதாம்.




பொருட்பெருக்கத்தின் ஊழ்
சோர்விலா முயற்சியும்.
பொருட்செலவின் ஊழ்
சோம்பலையும் உண்டாக்கும்.

பொருளிழத்தலின் ஊழ்
ஒருவனை பேதையாயும்.
பொருளாக்கலின் ஊழ்
அறிவாளியாயும் ஆக்கும்.

நுண்பனுவல் பலகற்றிடினும்
ஒருவனின் ஊழ்நிலைக்கு.
தகுந்ததான அறிவுமட்டுமே
மேம்பட்டுத் தோன்றும்.

ஊழ்வினையால் உலகியற்கை
இருவேறு வகைப்படும்.
செல்வராதல் ஓரூழ்
அறிவுடையராதல் மற்றோரூழாம்.

நல்லூழால் ஒருவனுக்கு
தீயவை நல்லவையாவதும்.
தீயூழால் நல்லவை
தீயவையாவதும் உண்டு.

நல்லூழ் வாய்க்காதபட்சம்
வருந்திக் காத்திடினும்.
தமக்குரியவை அல்லாதவை
நில்லாமல் ஓடிப்போம்.

நல்லூழுடையவன் தனக்கானதை
ஒதுக்கித் தூக்கியெறிந்தாலும்.
நலங்கெடாது போனவை
திரும்பவந்து சொரியும்.

ஊழால் துன்பங்கள்
வருத்தாமல் போகுமானால்.
நுகரவியலா வறியவர்கள்
தன்னாசை துறப்பார்கள்.

நல்லூழால் இன்புற்றுவிட்டு
தீவினையில் கலங்குவதேனோ?
விலக்கும்படியான மாற்றூழிலும்
ஊழ்வினையே முன்வந்துநிற்குமே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# நிகரில்லா துரோகம்



உயிரின் நிகராய்
உன்னதம் படைத்தோம்

வாழ்வின் சிறப்பில்
வானுயர்ந்து நின்றோம்

இருவேறு கருவறையில்
இன்பத்தில் படர்ந்து

உடலோடு இணைந்த
உயிராய் கலந்தோமே

தாகத்தின் மழலையில்
துரோகத்தை துறந்தோமே

புதுயுறவு பூத்ததும்
பழமையும் கசந்தது

கசந்த உறவிலே
காரிருள் சூழ்ந்ததே

நட்பினை அழித்து
நஞ்சினை விதைத்தாயே

உறவாடி கெடுப்பதற்கு
ஊக்கமாய் இருந்தாயே

தோலுக்கு நிகராய்
தோல்வியும் தந்தாயே

அன்பையும் விதைத்து
ஆறாவது வடுவையும்

அனுதினும் தந்தாயே
ஆனந்தத்தை அழித்தாயே

உடன்பிறப்பு பிரித்து
ஊமையாய் நின்றாயே

துரோகத்தின் உச்சியை
துரத்தி சென்றாலும்

நீங்காது நேசமாய்
நீண்டக்காலம் காத்திருப்பேன்

மீண்டுமொரு மழலையாய்
மண்மீது பிறப்பதற்கு.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# உனக்கும் எனக்குமான காதல்

எப்போதும்
ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும்
உன் நினைவுகளை
எங்கேயோ இருந்தபடி
ஆட்டுவித்தல் செய்கிறாய்.

ஒவ்வொரு முறையும்
இதிலிருந்து மீண்டெழுதல் என்பது
அவ்வளவு சுலபமில்லை
இருப்பினும்
அதைமறத்தல் என்பதிலும் விருப்பமில்லை.

நினைத்தலுக்கும்
மறத்தலுக்கும் மத்தியில்
ஒரு புள்ளியில் தொடங்கி
அதே புள்ளியில் நிறைவுறும்
ஓர் தோற்றமாய் தோற்பதிலேயே
அலாதிப் பிரியமாகிறது.

உனக்கும் எனக்குமான காதல்.



கவிஞர் இரா.இராஜா,சேத்தியாத்தோப்பு

# பாரதியின் ரசிகையானவள்

நீவிர்! விட்டு சென்ற வரிகளுக்கு எல்லாம்
இங்கே இவளால்
மௌனமொழியிலே வரிகளுக்கு உயிருட்டப்படுகின்றது

நீவிர்! கவி வரிகளை உனக்கே வாசித்து காட்டி
விளக்கத்தையும் கொடுத்திட முயன்றிடுவாளே
உந்தன் ரசிகை.

நீவிர்! கவி வரிகளை தவிர வேறு எந்த நூலினையும்
தீண்டிட கூட அவள் விரல் நுனிகளோ விரும்பவில்லை.

கல்லூரி செல்லாமலே பட்டம் பெற போகின்றாள்
நூலகத்திலே.
திருடி என்ற பட்டம்.
பாரதியின் கவிகளை திருடியவள் என்ற பட்டமாம்!

உறைந்துப் போய் கிடக்கின்றாள்
பாரதியின் கவிகளுக்குள்ளே.
அவ்வப்போது எட்டி பார்க்கின்றேன் உயிர் உள்ளதா என்றே.



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை - சாப்டூர்

# விடியும் வேளை

சேவலது கூவிட
குவலயமே புலருகிறது

பறவைகளோ கவிபாட
புதுநாளது உதயமாகிறது

வைகறை வேளையது
பனியுமே பொழிகிறது

மனதோடு மணமாக
முகைகளுமே மலருகிறது

கதிரவனி னொளியாலே
கனவுகளுமே கலைகிறது

காலையிலே மழலைகளோ
விழிமலர அழுகிறது

நீலவான அழகினிலே
மனதுமது மகிழுகிறது

மேனியது எழிலாக
இளவெயிலே துணையாமே

இதமான அதிகாலை
இவளுடனே உறவாட

வேலைகளோ மலையாக
விரைகிறேனே தனியாக



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# நினைவுக் களஞ்சியம்



ஆழியைவிட ஆழம் கொண்டது
கடந்த காலத்தை சுமந்து
மனதில் ததும்பும் நினைவுக் கடலே
எத்தனை எத்தனை நிகழ்வுகள்.
சூரியனைப் போல் சுட்டெரித்ததும்
நிலவைப் போல் குளிர்வித்ததும்
சூறாவளியை போல் சுழட்டியடித்ததும்
தென்றலைப் போல் தழுவியதும்.
ஆயிரமாயிரம் நினைவலைகள்
முட்டி மோதி
முடிவுற்றதிற்கு முகவுரையாகி
நிகழ்பவைக்கு முன்னுரையாகி
முடிவுரைக்கு பாடமாகி
மூச்சடங்கும் வரை நிழலாக
எனை தொடரும் வற்றாத ஊற்று.

கவிஞர் சாந்தி,காங்கயம்

# கூட்டத்தில் ஒருத்தி




உருகும் மெழுகின்
அழுகை சத்தம்கூட
கேட்கும்
நிசப்தமான அமைதி

கரையேறியப் பிறகும்
உலராது நினைவில்
ஈரத்தின் விறையல்

சாலை நெடுகிலும்
உடன் வரும்
உள்ளத்து உணர்வில்
கல் கொண்டு எரியும்.

உடை மாற்றியும் விலகாது
ஒட்டிக் கொள்ளும்
உறுத்தல்

பயணத்தில்
பயணியாக இருக்க
விரும்பும் மனதோடு
விரும்பாத வலிகளும்
விடை தந்தும்
விலகாத அலப்பறையும்

நெடுந்தூர அமைதி
தனிமையில்
தனை வழிநடத்தியே
தணிந்து சுவாசிக்கும்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கண்ணில் நிறைந்த கவிதை

கூந்தல்
விரித்த தென்றல்
மழைமுத்தம்
கேட்கையில்

கெட்டி முத்தம்
சத்தமாய்
சங்கீத சாரலின்
சலசலப்பின் இடையிலே
ஒரு குளுமையின் கலப்பு

தொட்டு தழுவிடும்
தொடர் முத்தத்தின்
வேட்கையில் வேங்கையின்
சீற்றம் தென்றல்மகளுக்கு

சிணுங்கலாய்
மண்ணிலே கலந்து
மணம் புரியும் மழை
மயக்கத்தில் திரிந்து
மறைவிடம் தேடி

கரைந்து காதலாய்
களிநடனம்
கவித்துவ ஓடைக்குள்
காதலாய் கலக்குதே



சடசடவென சதிராடி
நடனபுரியும்
புனித நீராட்டு விழாவோ
செடிக்கும் கொடிக்கும்

பின்னிய வெட்கத்தில்
பளபளத்த பச்சையில்
அகல மறுத்த விழிகள்
ஆசையுடன் ஒர் தழுவல்
மேகத்தின் கருமையை
ஆழ்ந்து ரசித்தன

கலையாமலே
கவிதை புனையும் காட்சி
கண்ணுக்குள் நிறைந்தே.

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# பழம்தரும் மரங்களே பயன்தரும் மரங்கள்

பசித்த ஔவைக்கு பசியாற்றினான் முருகன்
பயணத்தில் இருந்த ஔவைக்கு இடையனாய்வந்து!
சுட்ட பழம்வேண்டுமா சுடாத பழம்வேண்டுமாவென
சுட்டெரிக்கும் வினாவொன்றை அறிவார்ந்த ஔவையிடம்
வினவியவள் அறியாமையைத் தெளிவித்தான் ஞானகுருவாய்!

முருகன் பழவிருந்து அளித்தான் பைந்தமிழ்ப்பாட்டி
மனமகிழ வென்றாலும் நாவல்மரமும் அங்கிருந்தது;
நல்ல பழங்களைத் தானம்தந்தது தமிழுக்காக!
நானின்று சிந்தித்து பார்க்கிறேன் நானிங்கு
நடந்து செல்லும் வழியில் பழம்தரும்
மரங்களும் இல்லை; பழம்பறித்து அளிக்க
மாக்களை மேய்க்கும் நல்லிடையர்களும் இன்றில்லையே!



அசோகர் மரம்நட்டார் சாலைகள் ஓரமென
அன்று சிறுபாலகனாய்ப் பள்ளியில் பயின்றேன்;
அரசுகள் இன்று வீட்டிற்கோர் மரம்நடுகவென்றால்
அலட்சியமாய் மக்கள் சொல்கின்றனர் அரசிடம்
முதலில் எமக்கோர் வீடு தாருங்கள்;
அதன்பின் எம்மையோர் மரம்நடச் சொல்லுங்களென்றே!

மரம்நடுங்கள் என்றுரைப்போர் மரங்கள் நட்டாலவை
மக்களுக்கு நிழல்தருமெனவும் தூயகாற்று தருமெனவும்
மரங்களால் மழைபெய்யுமெனவும் பற்பலவும் உரைக்கின்றார்;
உரைப்பவருள் ஒருவரும்மரங்கள் மனிதர்பசி போக்கும் என
உரைப்பதே இல்லை அதுயேனென சிந்தித்தோமா?

புளியமரங்கள் இருந்தன சாலையோரம் ஒருகாலத்தில்;
புதுபுது திட்டங்கள் தீட்டி புளியமரங்களைச்
சாகடித்தோம், சாலைகள் விரிவாக்கமெனச் சொல்லியது
சரிதான் என்றாலும் அதன்பின் நட்டவை
பயன்தரும் மரங்களென்றாலும் பழம்தரும் மரங்களாயில்லை!
பழம்தரும் மரங்களை சாலையோரம் நட்டிடுவோம்!
பைந்தமிழ்வள்ளுவன் சொன்னதன் வழியில்சிறு மாற்றத்தோடே!

ஒப்புரவறிதல்: குறள் - 216
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# மாயம்

அகிலத்தில் அவனன்றி
அனைத்தும் மாயை!
அறிந்தாலும் மனம்
பிரபஞ்சத்தின் துகளாய்
சுற்றித் திரிகின்றதே!
நான் என்னும் அகந்தை
அகத்தை அழிக்கிறதே!
ஆன்மாவின் கூக்குரல்
எட்டவில்லை உன் செவியில்!
அண்டத்தை அளக்கும்
ஆண்டவனை மறுக்கிறதே!
உன் மனம் என்னும் மாயை
எதிரில் தெரியும் பிம்பம்
நிஜமெனக் கொண்டதே!
கருந்துளையில் ஈர்க்கப்படும்
பிண்டமாய் அழிந்து போகாதே!
மண்ணுக்குள் போகும் வரை
மாயவலையில் சிக்கி
உன்னை உணர மறக்காதே!
ஆழியிலே அறிதுயிலும்
மாலே மணிவண்ணா என
மாயோனை மனதால் நினைத்திட
மாயை விலகுமே
வாழ்வது மலருமே!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# இலவச மருத்துவம்

பண்பின் அளவுகோலாய்ப் பரிமாற்று ஊடகம்
மாண்பு இழந்து ஏறுதே நாடகம்
மருத்துவத் துறையிலும் நோட்டின் விளையாட்டு
உருவாய்த் தாண்டவம் ஆடிடும் போக்கு

மருத்துவம் என்பது மகத்துவ சேவையே
மனிதத்துவம் தங்கிடும் புனிதத்துவ அவையே
வைத்தியர் தாதியர் தெய்வீக அவதாரமே
வையகம் வாழுமே இன்றியே சேதாரமே



இலவசமாய் மருத்துவம் வழங்கிடல் ஆனது
கலப்பற்ற பாலின் தன்மைப் பாங்கானது
கையிலே பணமில்லா மாந்தர் நோய்களுமே
கைகூடி மணமாய்ச் சுகங்களும் வாய்க்குமே

காசின்றிக் காசினிக்கு விடைகூறும் உயிர்களும்
சுவாசிக்கும் நலமுடனே தடையின்றி உறவுகளும்
விலைபோகும் மருத்துவர்கள் உலக சந்தையிலே
தலைகுனியும் அருவருப்பும் நிலவும் விந்தையே

உணர்வுகளால் உருவான உயிர்கள் வாடாது
உலகில் வறுமைப் பிணியால் சாகாது
போலி மருந்தின் போர்வை சூழாது
போலி வைத்தியர் பார்வை சேராது

இயற்றுவோம் மருத்துவ சேவை இலவசமாய்
போற்றுவோம் மருத்துவர்கள் சேவையை இதற்காய்
உயர்த்துவோம் கைகளை தேசம் சிறப்பாய்
உதவிடுவோம் நேசம் கொண்ட பிறப்பாய்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# இயற்கையோடு சிறிது உறவாடு

மனதினில் பாரங்கள் குறையும்
வாழ்வின் அர்த்தங்கள் புரியும்
நேசங்களில் வாசங்கள் ஊறும்.
இயற்கையோடு நீ சிறிது உறவாடு !

இலைகளில் பசுமை மலரும்
மலர்களில் ராகங்கள் பிறக்கும்
தளிர்களில் தாளங்கள் துளிர்க்கும்
இயற்கையோடு நீ சிறிது உறவாடு !

மழையில் அவனருள்கள் பொழியும்
மண்ணில் விந்தைகள் விளையாடும்
கைவிரல் படக் காயும் கனியாகும்.
இயற்கையோடு நீ சிறிது உறவாடு!



வேர்களில் ஜாலங்கள் ஜனனிக்கும்
பயிர்களில் வளங்கள் தெரியும்
விடியல்களில் அற்புதங்கள் பிறக்கும்.
இயற்கையோடு நீ சிறிது உறவாடு !

உனக்குள்ளும் கவிகள் பிறக்கும்
உதிரும் சொற்களே உன்னுள் உரமாகும்..
கவலைகள் யாவும் மறந்தே போகும்..
இயற்கையோடு நீ சிறிது உறவாடு !

பயிர்களும் உன் மொழிகள் அறியும்
பாசம் அதன் செழிப்பில் தெரியும்
பூக்களும் உன்காதல் அறியும்.
இயற்கையோடு நீ சிறிது உறவாடு !

கவிஞர் செண்பகச்சோலையாள் ஆய்ஷ்

# நிசமோ நிழலோ

வாழ்க்கை என்பது தேடல்
அதன் தேவை மனம்
.
வாழ்வு என்பதும் தேடல்
இதன் தேவை பணம்

நினைவை நிசமாக்கி
நிசத்தை பொருளாக்கி

பொருளை உயிராக்கி
உயிரை உணர்வாக்கி

உணர்வை உரித்தாக்கி
உறவின் உன்னதத்தை

உறவுக்கு புரிய வைக்கும்
புரிதலே தேடல்

பணம் என்ற போர்வையில்
மனம் துண்டானதாம்

பலம் தொலைந்த மனதுக்கு
ஆறுதலே உயிரானதாம்

அன்பென்ற சொல்லும்
அழியவில்லை
உறவென்ற சொல்லும்
ஓயவில்லை



அவசர யுகத்தில்
அமைதியின்றி
யாவுமாய் யாவரும்

கவிஞர் வ.சு.கலைவாணி,நெய்வேலி

# கேரளம்

காண்விழாக்கள் திருச்சூர்தன் பூரமதும் மகரவிளக்கு
மகரவிழா போன்றவையே! மாநிலத்தின் பழமாகும்
இன்பலாவே! விலங்காகும் சீர்யானை! பறவையாம்
கிரேட்காரன்பில்! மலராகும் கன்னிகோனா! நீள்மரமோ
தென்னையே! ஆறுகளோ நெய்யாறு பம்பையும்
பெரியாறு சித்தாறு போன்றவையே! செய்தொழில்கள்
வேளாண்மை பணப் பயிர்கள் விளைச்சலும் கைத்தறியும்
கைவினைப்பொருள் ஆக்குதலும் என்றிடலாம்! மாநிலத்துச்
சிறப்பாகும் இயற்கைவளம் கேரளீய ஆயுர்வே
தமுடனூண் வகையதுவும் படகுவீடு மாண்விழாக்கள்
சுற்றுலாத்தலம் எழில்மலைகள் காயல்கள் கடற்கரைகள்
காணுயிர்கள் நீர்வீழ்ச்சிகள் என்றமைந்த பற்பலவாம்!
கண்டுமகிழ தேக்கடியும் பெரிரார்பேர் தேசீயப்
பூங்காவும் மூணாறும் வயநாடதும் ஆலப்புழா
கொச்சியதும் கொல்லமென கோவளமும் குமரகமும்
பூவார்தன் கடற்கரையும் ஆத்திரப்பா லிநீர்வீழ்ச்சி
மலயாட்டூர் தேவாலயம் புனலூரின் தொங்குபாலம்
போன்றவையாம்! வனவிலங்கு சரணாலயம் புலிகாப்பகம்
இந்தியசோம் பல்கரடி சிங்கவால்கொள் குரங்கதுவும்
இந்தியவகை காட்டெருமை வங்கப்புலி நீலகிரியின்
வரையாடு என்பனவாம்! தேநிலவுத் தலமாகும்
வயநாடு பூலோக சொர்க்க சொர்க்கமாகும்!
மரவீடுகள் மலைக்குடில்கள் மனிதர்தம் மண்டையோ
டுவடிவத்து தலைப்பாறை மிக்கின்பம் சேர்த்திடுமே!
தேயிலையின் தோட்டங்கள் யானைமேல் ஸவாரியதும்
மாக்களிப்பு கூட்டிடுமே! மனிதயிதய வடிவயேரி
காப்பித்தோட் டம்பலவும் என்றென்றும் பசுமையது
மாறாத திருவனந்தபு ரநகரமதும் "கொல்லத்தைக்
கண்டவர்கள் தம்மில்லம் திரும்பா"ரெனும் சொல்வழங்கல்
ஏற்றமென்பர்! சென்றங்கு எழில்கண்டு மகிழ்வோமே!



கவிஞர் கனைக்காயன் (இ.சே.இராமன்)

# தமிழ் வருட பிறப்பு




சித்திரை தமிழ் பெண்ணே
நீ சரித்திரம் படைக்க
வருவாயா கண்ணே
நீ நித்திரையில் உறங்காதே.

தமிழ் மாதத்தில்
தமிழரின் உள்ளங்களில்
தமிழன் பண்பாட்டை வளர்க்கும்
என் தமிழ் குடி மகளே.

சித்திரையில் தோன்றும்
அமாவாசை இருளாக
தந்து விடாதே.
வெளிச்சத்தை கொடுக்கும்
நிலாவை போல் தோன்று

சித்திரை மாதத்தில்
வருகிற முதல் விழா.
மக்களுக்கு ஆனந்தத்தை
அள்ளித்தரும் அற்புத பெரு விழா.

ஆலயங்களில் ஆராதனை
மக்களின் மன மகிழ்ச்சி
கடவுளின் தெய்வீக சக்தி
பெற்று எல்லா வளமும் நலமும் நிறைந்த
சித்திரை முதல் நாளாம்.

சொல் எடுத்து வெள்ளியில்
முளைத்த சித்திரை பெருவிழா.
சித்திரை முதல் நாளிலே
தமிழர்கள் கொண்டாடும் வகையில்
தமிழ் வருட பிறப்பு.

சித்திரையில் பூத்த
என் தமிழ் மகளே
நித்தம் கலைத்து விடு.
நித்திரையில் உறங்காத
சித்திரையில் பிறந்தவளே

நின் புகழைப் பாடும்
இவ்வுலகில் யாவரும்
நலமாக வாழ்த்தி மகிழ்கிறேன்
ஆலையங்கள் வழிப் பாடும்
மக்களின் மன மகிழ்ச்சியும்
உன்னை வாழ்த்தி வணங்கிறோம்.

சித்திரை முதல் நாளாம்
தமிழ் வருட பிறப்பே.
வருக வருக என் தமிழ் மகளே!

கவிஞர் தமிழருவி.ஏ.கோபி,நத்தம்

# ஹைக்கூ

தித்திக்கும் இலவசம்
சமயத்தில் உயிர்க் காக்கும்
மருத்துவக் காப்பீடு



வெளி விளையாட்டுகள்
வெகுவாய் குறைந்தன
குழந்தைகளிடம்
ஆரோக்கியம்

காணவில்லை
ஒருமாதமாய் திருந்தி விட்டார்களா
முச்சந்தியில் பூசணிக்காய்

திரளும் மேகங்கள்
கலைந்து செல்கின்றன
பாதுகாப்பைத்தேடி கால்கள்



குடிசை வீட்டில்
நிறையவே இருக்கும்
சேவை குணம்

முதியோர் இல்லங்கள்
நிறைந்து இருக்கின்றன
தொட்டில் குழந்தைகள்

கவிஞர் லா.பெனிஸ் தமிழ் மருத்துவர்,நெல்லை

# புகழ்ச்சோழ நாயனார்

சோழ நாட்டின் பழமையான சிறந்த தலைநகர் உறையூர்
சோழ சக்கரவர்த்தி அநபாயன் வழி சிறக்க வந்த மன்னன்
புகழ் சோழ நாயனார் பெருமைகள் சொல்ல மாளாது காண்
வாழ்வாங்கு வாழ்ந்து உறையூரை உலகுக்குக் காட்டியவன்

வெற்றி மீது வெற்றி பெற்று நாடுகள் பல வென்றான் புகழ்
தோற்ற அரசர்கள் தவறாது கரூரில் திரை செலுத்துவார்கள்
நெற்றியில் நீறு பூசி சிவாலயங்களில் பூசை சிறக்கச் செய்தான்
பற்றுதல் இல்லாத சிவனடியார்களுக்கு வாரி வழங்கினான்

கரூரில் இருக்கும் சிவன் கோவிலில் சிவ பூசை தினம் உண்டு
ஒரு சிவனடியார் சிவகாமியாண்டார் மலர் கொய்து வருவார்
அருகில் நந்தவன பூக்களை குடலையில் கொண்டு வருவார்
ஒருநாளும் அவர் தரும் மலர்கள் இல்லாமல் பூசை கிடையாது



வழக்கம்போல் பூகுடலையுடன் வீதியில் நடந்து வந்தார்
பழக்கமில்லாமல் பட்டத்துயானை அவரைக் கீழே தள்ளியது
விழுந்தார், குடலைப் பூக்கள் தெருவில் சிதறி நாசமாகின
மழுவோடு வந்த எறிபத்தர் யானை துதிக்கையை வெட்டினார்

"சிவ பூசை என் யானையால் தடை பட நானே காரணம்
தவத்தில் சிறந்த அடியார் அடிபடவும் நானே காரணம்
பவனி வந்த பட்டத்து யானை தவறுக்கும் நானே காரணம்
சிவன் கோபத்திற்கு ஆளான நான் இனி உயிர் வாழ்வேனா?"

தன் வாளால் கழுத்தை அறுக்க , காட்சி கொடுத்தார் நாதன்
"உன் பிழை பொறுத்தோம் நிறுத்து!" தடுத்தாட் கொண்டார்
மின்னெலென நடந்து முடிந்தவை புகழுக்கு புகழாரம் தான்
பின் நடந்தவை: இறையருள் பெற்ற புகழ் உறையூர் வந்தார்

மன்னனுக்கு வந்த ஓர் செய்தி அதிர்ச்சியானது சினம் கொண்டான்
தன் பிடியில் இருக்கும் அதிகன் சிற்றரசன் திரை செலுத்தவில்லை
தன்னை அவமதிக்கும் அவன் நாட்டின் மீது போர் தொடுத்தான்
முன் நின்று போரிட இயலாத அதிகன் புறமுதுகிட்டு ஓடினான்.

போருக்குச் சென்ற வீரர்கள் வெற்றி வாகையுடன் நாடு திரும்பினர்
ஊர் திரும்பும் வீரர்கள் பல திரவியக் குவியல்களுடன் வந்தனர்
சீர் வரிசை போல் மூட்டைகளாக அடுக்கி பார்வையில் வைத்தனர்
பார் போற்றும் புகழ் பெருமிதமாக பார்த்துக் கொண்டு வந்தான்

சிறை பிடிக்கப்பட்ட வீரர்கள் தலை குனிந்து கைதிகளாக நின்றனர்
முறையாகக் கொன்று குவிக்கப்பட்ட வீரர்கள் தலைகள் கிடந்தன
விறைத்து கிடக்கும் தலைகளில் ஒன்றைக் கண்டு திடுக்கிட்டான்
மறைவின்றி நீறுபூசிய நெற்றியும் உச்சிக் கொண்டையில் பூக்கள்

"ஐயகோ பாவமே அறியாத ஒரு சிவனடியாரைக் கொன்ற பாவி
செய்வினை அறியாது தீவினை தூற்றுதலுக்கு ஆளாகிப் போனேன்
உய்வு உண்டோ எனக்கு? இனி உயிர் வாழ்ந்து பயனென் கொள்!'
அடியார் தலையை தலையில் ஏந்தி தீ புக,காட்சி கொடுத்தார் நாதன்.

**கவிஞர் ந.திருக்காமு**

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# எதுவும் நிரந்தரமில்லை!

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே என்றிடுதே
நன்னூலும்! இவ்வுலகில் எதுவும் நிரந்தரமில்லை!
காலத்தின் கோலத்தில் கரைந்திடும் இளமையும்!
நிலைமாறும் உலகில் நிலைக்குமென்ற கனவில்
அல்லவை செய்தே வாழ்கின்ற கூட்டமுண்டு!
உயர்வும் தாழ்வும் ஓரிடத்தில் நிலைப்பதில்லை!
ஏழ்மையை மாற்றிடலாம் இருப்போர்க்கு மனமிருந்தால்!
வாழ்வியலில், சூழலில், வானியலில், அறிவியலில்
வாழிடங்கள் பலவற்றில் நாளடைவில் மாற்றங்கள்!
கல்லாமையை மாற்றிடலாம் கற்றறிந்தோர் முன்வந்தால்!
பொல்லாப் பகைமறையும் மன்னிக்கும் குணமிருந்தால்!
ஏற்ற இறக்கங்களை ஏற்கின்ற மனமிருந்தால்
பெருந்துயரால், பெருமகிழ்வால் பாதிப்பு ஏதுமிலை!
நேற்றிருந்த தொழில்நுட்பம் இன்றிலை எனும்நிலை
அறிவியல் வளர்ச்சியின் வெளிப்பாடாய் அமைகிறதே!
எத்தனையோ உயிரினங்கள் இருந்த சுவடின்றி
மொத்தமாய் அழிந்ததை உயிரியல் உரைத்திடுதே!
பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலமதே
இருப்பென இருந்திடுமே மானிடரின் வாழ்வினிலே!
பிறப்பின் நோக்கம் பிறருக்கு உதவிடலே!
இன்சொல், புன்னகை, நல்லொழுக்கம், நல்லிதயம்
கொண்டிருந்தால் நற்புகழை ஈட்டிடலாம் இவ்வுலகில்!
இயன்றவரை பிறர்க்கு ஈவதில் மகிழ்வடைவோம்!
செயற்கரிய செய்வார் பெரியர் என்றாவர்!
செயல்களால், சொற்களால்,சிந்தனையால், குணத்தால்
வியத்தகு மாற்றத்தை விளைவிப்போம் இவ்வுலகில்!
பயனடையும் தலைமுறைகள் வாயார வாழ்த்துரைக்கும்!
பிறர்க்கென வாழ்கின்ற நல்லோரை இவ்வுலகம்
மறவாது எந்நாளும்! மன்னுபுகழ் நிலைத்திருக்கும்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# இலங்கை போக்குவரத்து சபைப் பேருந்து

காற்றை கிழித்து காதல் பாடும் செந்நிற மேனி
காதல் பாடமெடுக்கும் செந்நெல் கிராமம்
இத்தனைக்கும் இடைநடுவே
வளைவுகளில் எல்லாம் கையசைத்துக் கொண்டிருப்பான்

யாரவன்?
பஸ்ஸைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பானே அவனே தான்.
மலையில் இருந்து ஓடி வரும் அருவியைப்போல
அவன் தலையிலிருந்து முகத்தில் வழிகிறது அருவியின் வியர்வை.
என்னை துரத்தி வரும் மின் கம்பிகள்.
கண்ணை சிமிட்டி பண்ணிசைத்து பறக்கும் பச்சைத்தும்பிகள்.

பெண்ணைப் பார்த்துக் கொண்டிருக்கும் வாலிப மலைகள்.
விண்ணைப் பார்த்து விசிலடிக்கும் தொப்பையில்லாத் தென்னைகள்.
கண்ணாடி இருக்கையில் காற்றோடு உறவு பேசிடும்
என் வாலிப கவிதைகள்.
தேடல்களில் தேங்கி கிடக்கும்
சாளரத்து சாரம்சங்களை செப்புகின்றேன்
சாலையோர பெட்டிக்கடைகளில்.

தனிமையும் இனிமையுமாய் வழிகிறது மௌனமொழி.
விழிமொழியை நனிமொழியில் சமர்ப்பனமாக்குகின்றேன்.
உணர்வு எனும் ஒற்றைப்பாதையில் பருகிக்கொண்டிருக்கின்றேன்.
பல்கலையின் மீழ் வருகையை இ.போ.ச பஸ்களில்.

காணும் நனவெல்லாம் பயணத்தோடு துவங்க
பக்கத்தில் குறட்டைச்சத்தம் அதுவும் கனவாகிப்போனது.
ஆசனங்களில் ஆசையாசையாய் பச்சைக்குத்திய
அவனினதும் , அவளினதும் இரட்டை காப்பிய பெயர்கள்
வெள்ளோட்டம் செலுத்திக்கொண்டிருக்கின்றன இ.போ.ச பஸ்களில்.

நனவானால் கல்வெட்டு சாசனம்.
கனவானால், இ.போ.ச ஆசனம்.
பலாக்கனியின் பலாச்சுளையைப்போல
காற்று புகா வண்ணம் அடுக்கப்பட்ட
பயணிகளும் பொதிகளும்




நிறைமாதப்பெண்ணைப்போல
பைகளுடன் சாலையோர போலிஸ்காரர்கள்.
நூறு ரூபா காசை நீட்டும்
ஏறு போன்ற கந்தையாக்கிழவன்
நரைத்த முடியுடன் வளைத்த மீசையுடன்
உயர்த்திய புருவத்துடன் இ. போ.ச பஸ்களில்.

வகுப்பெடுத்து டயரியும் கையுமாய்
வழியும் வியர்வையை சட்டையிலே துடைத்துக் கொள்ளும்
டியூசன் வாத்தியார்கள்.
பசியோடு வீடு திரும்பும் பள்ளிக்கூட புறாக்கள்
வசிகரக்குரலாலும், வயலின் வாசிப்பாலும் பிழைக்கும்
இ.போ ச பஸ் பாடகர்கள்..

இவ்வளவும் பக்க கண்ணாடியில் பதிவாக
கடைக்கண்ணால் பார்த்து பெரு மூச்சு விடும் பஸ் சாரதி.
"நீட்டிக்கொண்டிருக்கும் நோட்டுக்கெல்லாம்
எங்கு போய் சில்லறைத்தேட"
சிணுங்கலோடு சனங்களுக்குள்ளே நகரும் அவன்

வசந்த காலமும் உண்டு.
வியர்வை மணங்களுக்கும்
துவண்டு போய் வெறுத்த காலமும் உண்டு.

இ.போ. ச பஸ்களில். மீண்டும் வா. இ.போ.ச பஸ்ஸே!

கவிஞர் மதீரா அறிவிப்பாளினி,இலங்கை

# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## (கட்டுரை)



☞ திருச்சி அருகே உள்ள எண்ணெயூரில் (6 ஏப்ரல் 1815) பிறந்தார். தமிழ்ப் புலவரான தந்தையிடமே தமிழ் கற்றார். அபார நினைவாற்றல் கொண்டவர். பாடல்களைப் படித்த வேகத்தில் மனதில் பதிய வைத்துக்கொண்டு, சிறுவயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றிருந்தார்.

☞ சென்னை சென்று சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களிடம் கல்வி பயின்று புலமை பெற்றார். காப்பியங்கள், அற நூல்கள், சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் என அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

☞ சிற்றிலக்கியக் காலம் என்று கூறப்பட்ட இவரது காலத்தில் திருத்தலங்களின் வரலாற்றை விவரித்து ஏராளமான தல புராணங்கள் பாடினார். இவரது புலமையை அறிந்து நாடிவந்த பலருக்கும் தமிழ் கற்பித்தார். இவரிடம் பயின்றவர்களில் ‘தமிழ்த் தாத்தா’ உ.வே.சாமிநாத ஐயர், குலாம் காதர், நாவலர், சவுரிராயலு நாயக்கர் குறிப்பிடத்தக்கவர்கள்.

☞ சீர்காழியில் முன்சீப்பாக பணியாற்றிய மாயூரம் வேத நாயகம் பிள்ளையுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அவர் மீது வைத்திருந்த பெருமதிப்பின் காரணமாக, அவரைப் பாராட்டி ‘குளத்துக்கோவை’ என்னும் நூலை இயற்றினார்.

# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## (கட்டுரை)


- மயிலாடுதுறையில் பலகாலம் தங்கி மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு 'மகாவித்வான்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார். சிவபக்தி, அடக்கம், விருந்தோம்பல், உயர்ந்த உள்ளம், கற்றாரைப் போற்றும் தன்மை ஆகிய நற்குணங்களைப் பெற்றிருந்தார்.

- திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தார். தன்னிடம் கல்வி பயில வருபவர்களை சொந்த பிள்ளைகள்போலக் கருதி உணவும், இடமும் அளித்து பாரபட்சமின்றி கல்வி புகட்டினார்.

- 19-ம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவர் இவர்தான். புராணங்கள், காப்பியங்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள், அந்தாதி, கலம்பகங்கள், கோவைகள், எண்ணற்ற தனிப் புராணங்களை இயற்றியுள்ளார். பிள்ளைத்தமிழ் நூல்களைப் பாடியதால் 'பிள்ளைத் தமிழ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை' என்று புகழப்பட்டார்.

- பெரியபுராணம் பிரசங்கம் செய்வதில் வல்லவர். இவரது படைப்புகள் அனைத்துமே செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. சுமார் 2 லட்சம் பாடல்களை இவர் இயற்றியதாகக் கூறப்படுகிறது.

- 'தாயைவிட என் மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான்' என்று உ.வே.சா. இவரைக் குறிப்பிட்டுள்ளார். இவரது படைப்புகள் பலவற்றை ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு என்னும் பெயரால் உ.வே.சா. வெளியிட்டுள்ளார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் என்ற தலைப்பில் இவரது வாழ்க்கை வரலாற்றை உ.வே.சா. எழுதினார்.



# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

(கட்டுரை)

☞ தமிழ் மொழிக்கு ஒப்பற்ற தொண்டாற்றிய தமிழ் அறிஞர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 61 வயதில் (பிப்ரவரி 1, 1876) மறைந்தார்.



☞ நன்றி : https://www.hindutamil.in/news/blogs/40115-10.html

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்



அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
கடினமாக உழைத்தவர்கள்
எல்லாம் முன்னேறி விடவில்லை.
கவனமாகவும் நம்பிக்கையுடனும்
உழைத்தவர்களே வாழ்க்கையில்
முன்னேறி உள்ளனர்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com